1432 432

1051

Manavar Mani Malai

FIRST READER

மாணவர் மணி மாலை

முதற் புத்தகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

By

V. ANTONY SAWMY M.A., L.T.,

St. Xavier's High School, Tuticorin.

A. V. D. PACKIAM PILLAI

PUBLISHER :: TUTICORIN

COPYRIGHT] 1939 [PRICE AS 3.

மாணவர் மணி மாலை

முதற் புத்தகம்

1939-ம் வருஷ புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து
எழுதப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

BY

V. அந்தோனிசாமி, M. A., L. T.,
உதவி ஆசிரியர்
அர்ச். சவேரியார் ஐஸ்கூல்
தூத்துக்குடி.

A. V. D. பாக்கியம் பிள்ளை
பப்ளிஷர் :: தூத்துக்குடி

பதிப்புரிமை] [விலை அணா 3

First Edition 1939.

முகவுரை

புது முறையில் இயன்ற இவ்வாசக வரிசை, அரசாங்கத்துக் கல்வி இலாகா அதிகாரிகளால் 1939-ம் வருஷம் வெளியிடப்பெற்ற புதிய பாடத்திட்டத்தை யொட்டி, ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள முதல் ஐந்து வகுப்புக்களுக்கு ஏற்றவாறு, அமைந்துள்ளது. புதிய பொருள்களைப் புது முறையில் விளக்கும் பல புதுப்பாடங்கள் இப் புத்தகங்களிற் புகுந்துள்ளன. புதுமையான பாட்டுக்கள் பல சிறு குழந்தைகளின் மனத்தைக் கவரத்தக்க நடையில் இன்னிசையோடு பொருந்த அமைக்கப்பட்டுள்ளன. சிறுசிறு நாடகங்கள் சில இக்கால இயல்புக் கேற்றவாறு இப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் பிறகும் புதுமுறையில் அமைந்த பயிற்சிகளும் விளக்கங்களும் இலக்கணக் குறிப்புக்களும் இப்புத்தகங்களின் புதுமையை விளக்கத்தக்கவையாம். இங்ஙனம் குழந்தைகளின் நன்மை கருதியே இன்னின்ன வகுப்பிலே இன்னின்ன பொருள் போதிக்கப்பெறல் வேண்டும் என அமைந்த புதிய பாடத்திட்டத்தை யொட்டி எழுதிய இப்புத்தகங்களைக் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களும் அதிகாரிகளும் ஆதரித்து எனக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

V. அந்தோனிசாமி.

மாணவர் மணி மாலை

முதற் புத்தகம்





ஈ　　　　கை

ஈ, கை





பூ

தீ



நா

பூ, தீ, நா

கல் பல்



காய் பாய்

கல், பல், காய், பாய்

கிளி

பிறை

கீரி

வீரன்

கிளி, பிறை, கீரி, வீரன்



ஆடு மாடு





வீடு காடு

ஆடு, மாடு, வீடு, காடு





ஊசி தூண்





நூல் பூட்டு

ஊசி, தூண், நூல், பூட்டு



எலி தெரு





பெட்டி கெண்டி

எலி, தெரு, பெட்டி,
கெண்டி



ஏடு



மேடை



குப்பை

தாழை

எடு, மேடை, குப்பை, தாழை



பையன் இலை





மழை யானை

பையன், இலை, மழை, யானை





கொக்கு கொம்பு



தொப்பி நொண்டி

கொக்கு தொப்பி

கொம்பு நொண்டி





கோயில் கோட்டை





தோட்டம் கோழி

கோயில் தோட்டம்

கோட்டை கோழி



ஔவை கௌளி





வௌவால் கௌதாரி

ஔவை வௌவால்

கௌளி கௌதாரி





ரோஜா தாஜ்மஹால்



ஸர்ப்பம் புஷ்பம்

ரோஜா தாஜ்மஹால்
ஸர்ப்பம் புஷ்பம்





பக்ஷி ஸ்ரீரங்கம்





பக்ஷணம் எஃகு

பக்ஷி பக்ஷணம்
ஸ்ரீரங்கம் எஃகு

அம்மா பார்

என் அப்பா

இவர் தாத்தா

பாட்டி பார்

அம்மா அப்பா தாத்தா
பாட்டி என் இவர் பார்



இவன் வண்ணான்　　இது ஒரு அணா

ராஜா வாழ்க　　ராணி வாழ்க

இவன், வண்ணான், ஒரு, அணா,
ராஜா, ராணி, வாழ்க





சூரியன் சந்திரன்

சூரியன் சந்திரன்

காலையில் வரும் மாலையில் வரும்

சூரியன் சந்திரன்

காலை மாலை

வரும்





வயல் முயல்

நெல் வயல் முயல் பார்

வயலுக்கு வா முயல் ஓடும்

வயல் முயல் நெல்

வா பார் ஓடும்

 

கடல் பார் தேர் வடம்

கடல் அலை வடம் இழு

கடல் நீர் வடம் பெரிது

உப்பு நீர் வடக் கயிறு

கடல் அலை நீர் உப்பு

தேர் வடம் கயிறு இழு





மரம் அரம்

புளிய மரம் அரம் அராவும்
புளியம்பழம் அரப் பொடி
இது புளிக்கும் இரும்பு அரம்

மரம் புளி அரம்

அராவும் பொடி

இரும்பு புளிக்கும்



என் முகம் — கை நகம்

முகத்தில் கண் — பத்து நகம்

கண் இரண்டு — கால் நகம்

இரண்டு காது — நகம் கிழிக்கும்

முகம் இரண்டு கால்

கண் நகம் கிழிக்கும்

காது





வலை

மாலை

மீன் பிடி	மாலை மணக்கும்
நூல் வலை	மாலை நீளம்
யார் வலை	மாலை போடு

வலை	பிடி	மணக்கும்
மீன்	யார்	நீளம்
நூல்	மாலை	போடு





சங்கு நுங்கு

சங்கு ஊது பனை நுங்கு

வெண் சங்கு நுங்கு இனிக்கும்

கடல் சங்கு இள நுங்கு

சங்கு முழங்கும் நுங்கு தின்பேன்

சங்கு ஊது முழங்கும் பனை

தின்பேன் வெண் சங்கு

நுங்கு இனிக்கும் இள நீறு



புத்தகம்

புத்தகம் படி
என் புத்தகம்
பெரிய புத்தகம்
நல்ல புத்தகம்



மத்தளம்

மத்தளம் அடி
தோல் மத்தளம்
கோயில் மத்தளம்
மத்தளம் முழங்கும்

புத்தகம் பெரிய

நல்ல படி

மத்தளம் தோல்

முழங்கும்





பம்பரம் ஒட்டகம்

பம்பரம் ஆடு
மரப் பம்பரம்
பம்பரம் சுற்றும்
பம்பரம் ஓடும்

ஒட்டகம் நடக்கும்
உயர்ந்த ஒட்டகம்
ஒட்டகம் ஓடும்
கோயில் ஒட்டகம்

பம்பரம் சுற்றும் ஆடு
ஓடும் ஒட்டகம்
நடக்கும் உயர்ந்த





சக்கரம் சுற்று
நூல் நூற்கலாம்
மரச் சக்கரம்
வெள்ளை நூல்

கார் மேகம்
மழை பெய்யும்
மழை நீர்
நீர் பாயும்

சக்கரம் சுற்று
நூற்கலாம் வெள்ளை
கார் மேகம் மழை
பெய்யும் நீர் பாயும்



நூல் நூற்கிறான்
பருத்தி நூல்
பட்டு நூல்
நூற்ற நூல்

துணி நெய்கிறான்
வெள்ளைத் துணி
தறியில் நெய்கிறான்
நெசவு நல்லது

நூற்கிறான் பருத்தி

பட்டு துணி

நெய்கிறான் தறி

நெசவு நல்லது

பாய் பின்னுகிறான்

கோரைப்பாய்
கோரை ஒரு புல்
பாயிற் படுக்கலாம்



வாழைக்காய்

காய் பறிக்கிறான்
சீப்புக் காய்
குலைக் காய்

பாய் கோரை

படுக்கலாம் பின்னுகிறான்

காய் பறிக்கிறான்

வாழை சீப்பு குலை



வயல் உழுகிறான்	நெல் அறுக்கிறாள்
ஏரால் உழுகிறான்	காய்ந்த நெல்
மண் புரள்கிறது	கதிர் சாய்கிறது
ஆழமாய் உழு	கதிரை அறுப்போம்

உழுகிறான்	ஏர்
மண்	புரள்கிறது
ஆழம்	அறுக்கிறாள்
காய்ந்த	கதிர்
சாய்கிறது	அறுப்போம்





ஓடம் கிளிக் கூண்டு

மர ஓடம்
ஆற்றில் ஓடம் ஓடும்
ஓடத்தால் ஆறு கடக்கலாம்

பச்சைக் கிளி
கிளி பேசும்
கொஞ்சும் கிளி

ஓடம்	ஆறு
கடக்கலாம்	விடுகிறான்
கிளிக் கூண்டு	பச்சை
பேசும்	கொஞ்சும்



மாம்பழம் ஒன்று.

இரண்டு பலாப்பழம்.





மூன்று குண்டுகள்.

நான்கு பம்பரங்கள்.





ஐந்து பந்துகள்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, மாம்பழம், பலாப்பழம், குண்டு, பம்பரம், பந்து.



ஆறு குருவிகள்.



ஏழு புறாக்கள்.



எட்டு வாழைப் பழங்கள்.



ஒன்பது முத்துக்கள்.



பத்து இலைகள்.

ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து.
குருவி, புறா, வாழை, முத்து, இலை.

இது ஒரு
குளம்.

குளத்தில்
தவளை
உண்டு.

மீன்கள் நீந்
தும்.



குளத்தில்
குளிக்க
லாம்.

கரையில்
புல் வள
ரும்



மாடு புல்
தின்னும்.



மாடு பால்
கொடுக்கும்.

குளம், தவளை, மீன்கள், நீந்தும்,
குளிக்கலாம், கரை, வளரும்,
தின்னும், பால், கொடுக்கும்.



இது ஒரு
வயல்.

வயலுக்கு
வேலி
உண்டு.



இது வயலின் வரப்பு.

வாய்க்கால்
ஓடுகிறது.



வயலுக்கு
நீர் பாயும்.

வரப்பில்
நடக்கலாம்.



வயலுக்குக் காவல்
வேண்டும்.

வேலி, வரப்பு, வாய்க்கால், பாயும்,

நடக்கலாம், காவல்.

அப்பியாசம் 1

ஈ	கல்	பிறை	வீடு	பூட்டு
கை	பல்	கிரி	காடு	எலி
பூ	காய்	வீரன்	ஊசி	தெரு
தீ	பாய்	ஆடு	தூண்	பெட்டி
நா	கிளி	மாடு	நூல்	கெண்டி

எடு	கொக்கு	ஔவை
மேடை	கொம்பு	கௌளி
குப்பை	தொப்பி	வௌவால்
தாழை	நொண்டி	கௌதாரி
பையன்	கோயில்	ரோஜா
இலை	கோட்டை	தாஜ்மஹால்
மழை	கோழி	ஸர்ப்பம்
யானை	தோட்டம்	புஷ்பம்
பக்ஷி	எஃகு	தாத்தா
ஸ்ரீரங்கம்	அம்மா	பாட்டி

பக்ஷணம் அப்பா

அப்பியாசம் 2

ராஜா	நெல்	நீர்	இரும்பு
ராணி	வயல்	தேர்	முகம்
வண்ணான்	முயல்	வடம்	கண்
அணு	வா	இழு	காது
வாழ்க	பார்	கயிறு	நகம்
சூரியன்	ஓடும்	மரம்	பத்து
சந்திரன்	வரும்	புளி	கால்
காலை	கடல்	அரம்	வலை
மாலை	உப்பு	பொடி	மாலை
சங்கு	சுற்றும்	பெய்யும்	பறிக்கிறான்
முழங்கும்	ஓடும்	பருத்தி	வாழை
நுங்கு	ஆடும்	பட்டு	சீப்பு
தின்பேன்	நடக்கும்	துணி	குலை
புத்தகம்	நாற்றல்	தறி	உருக்கிறான்
மத்தளம்	வெள்ளை	நெசவு	அறுக்கிறான்
தோல்	பாயும்	நல்லது	புரள்கிறது
கோயில்	மேகம்	பாய்	ஆழம்
பம்பரம்	சக்கரம்	கோரை	ஓடம்
ஒட்டகம்	மழை	படுக்கலாம்	ஆறு



புத்தகம்



பாடம் படி



கற்பலகை

கற்பலகையில்
எழுது.

பாடம், கற்பலகை,
படி, எழுது.



இது என் வீடு
இது கூரை வீடு
சிறு வீடு



வீட்டுக் கதவு
கதவைத் திற
கதவை மூடு

இது கீரிப்பிள்ளை
கீரி பாம்பு பிடிக்கும்
கீரி வேகமாய் ஓடும்



பாம்பு படம் எடுக்கும்
பாம்பு கடிக்கும்
அது விஷம் உள்ளது

கீரி, பிள்ளை, பாம்பு, வேகம்,
படம், கடிக்கும், விஷம், உள்ளது.



பல்லி

(பாட்டு)

பல்லி வருவது பார்—அது
பாய்ந்து வருவது பார்.
பல்லியும் பல்லியும் பார்—அவை
பாய்கிற சண்டையும் பார்.
ஈ ஒன்று இருப்பது பார்—அதை
எட்டிய பல்லியைப் பார்.
வாயிலே ஈ இதோ பார்—இங்கு
வந்திடும் பல்லியைப் பார்.

பல்லி, வருவது, பாய்ந்து, சண்டை, இருப்பது எட்டிய.

தலை

1. இது என் தலை.

2. கண் இரண்டு பார்.

3. காது இரண்டு உண்டு.

4. மூக்கு ஒன்று இருக்கிறது.

5. வாயில் பல் உண்டு.

6. வாயால் பேசுவேன்.

தலை, கண், காது, மூக்கு, பல், உண்டு, இருக்கிறது, பேசுவேன்.



வௌவால்

1. வௌவால் பறக்கிறது.

2. கோபுரத்தில் தொங்குகிறது.

3. வௌவால் பறவை இல்லை.

4. பகலில் வெளியே வராது.

5. இருட்டு அதற்கு வேண்டும்.

6. அது பழங்களைத் தின்னும்.

வௌவால், பறக்கிறது, தொங்குகிறது, பறவை, பகல், இருட்டு, வெளியே, வேண்டும், தின்னும்.



கொக்கு

1. கொக்கு ஒரு பறவை.
2. கொக்கு மேலே பறக்கும்.
3. அது கூட்டமாய் வரும்.
4. குளத்தில் மீன் கொத்தும்.
5. அதற்குத் கழுத்து நீளம்.
6. நீண்ட வாய் உண்டு.

கொக்கு, மேலே, பறக்கும், கூட்டம், குளம், கழுத்து, நீளம், நீண்ட.

அரசர்

1. இவர் நம்மை ஆளும் அரசர்.
2. இவர் இங்கிலாந்தில் இருக்கிறார்.
3. இவர் பெயர் ஆறும் ஜ்யார்ஜ்.
4. அரசர் அன்பு உள்ளவர்.
5. அரசர் குடிகளைக் காக்கிறார்.
6. அரசர் வாழ்க.

ஆறும், அரசர், இங்கிலாந்து, ஜ்யார்ஜ், குடிகள், வாழ்க.



கப்பல்

1. கப்பல் கடலில் ஓடும்.
2. கடலில் அலை உண்டு.
3. காற்றால் கப்பல் அலையும்.
4. பாய்க்கப்பல் காற்றால் ஓடும்.
5. நீராவிக் கப்பல் வேகமாய் ஓடும்.
6. பாய்மரம் பாய்க் கப்பலில் உண்டு.
7. நீராவி கப்பலை நடத்தும்.
8. கடலில் மீன்கள் உண்டு.

கப்பல், கடல், அலை, காற்று, அலையும், பாய்க்கப் பல், நீராவி, வேகமாய், பாய்மரம், நடத்தும், மீன்கள்.



உழவு

1. இவன் என்னசெய்கிறுன் ?
2. ஏரைப் பிடித்து உழுகிறுன்.
3. இரண்டு மாடு உண்டு.
4. மாடு ஏரை இழுக்கும்.
5. நிலத்தை நன்ருய் உழவேண்டும்.
6. மேல் மண் புரள உழுகிருேம்.
7. உழுத வயலில் விதைக்கிருேம்.
8. கதிர் நன்ருய் வளரும்.

ஏர், உழுகிறுன், இழுக்கும், நிலத்தை, நன்ருய், மேல், மண், புரள, விதைக்கிருேம், கதிர், வளரும்.

கோழி

(பாட்டு)

1. கோழியைப் பார் இதோ குழந்தாய்—அது
குஞ்சுகள் சூழவே குப்பையைக் கொத்தும்
கோழி தான் குப்பையில் எடுத்த—விதை
குஞ்சின் வாய்க்குள்ளே கொடுப்பது பாராய்.

2. தாயின் குணம் இது தம்பி—எந்தத்
தாயும் குழந்தையைத் தக்கபடியே
தாயின தன்பு விளங்க—இங்கு
தாமே உருக்கமாய்த் தழுவுமே பாராய்.

3. குஞ்சுகள் மெல்ல நடந்தே—தாய்
கோழியைச் சுற்றி வருகையில் வானில்
அஞ்சும் பகைகளைக் கண்டால்—தாய்
அணைக்கும் அழகையும் அன்பனே பாராய்.

4. பருந்தோ கழுகோ பறந்து—வந்து
பார்த்தொரு குஞ்சைப் பறிக்கவே வந்தால்
விரைந்தந்தக் கோழி தான் குஞ்சை ஒரு
வீட்டுக்குள் கொண்டுபோய் விட்டு மகிழும்.

நா. கனகராஜையர், B. O. L.

குழந்தாய், குஞ்சுகள், சூழ, குப்பை, கொத்தும் விதை, தாய், குணம், தம்பி, தழுவும் உருக்கம், வானில், அஞ்சும், பகைகள், அணைக்கும், பருந்து, கழுகு, விரைந்து, விட்டு, மகிழும்.

எள்

1. இது எள் செடி.
2. செடியில் சிறிய இலை உண்டு.
3. வெள்ளைப் பூ இருக்கும்.
4. காய்கள் பச்சையாய் இருக்கும்.
5. முற்றிய காய் காய்ந்துபோம்.
6. காய்க்குள் எள் இருக்கும்.
7. எள்ளில் எண்ணெய் எடுக்கலாம்.

எள், சிறிய, போல, முற்றிய, காய்ந்து, எண்ணெய்.



நகம்

1. நகம் விரலில் உள்ளது

2. நாம் நகத்தால் கிள்ளுகிறோம்

3. நகத்தில் அழுக்கு ஏறும்

4. நகத்தைச் சீவுகிறோம்

5. சீவினால் அழுக்கு அடையாது

6. பூனையின் நகம் வேறு வகை

7. பூனை நகத்தை உள்ளே இழுக்கும்

8. கோபம் வந்தால் வெளியே நீட்டும்

விரல், நகம், கிள்ளுகிறோம், அழுக்கு, ஏறும், சீவுகிறோம், அடையாது, கோபம், வெளியே, இழுக்கும், நீட்டும்.

தச்சன்

1. இவன் ஒரு தச்சன்.
2. இவன் என்ன செய்கிறான்?
3. மரத்தை உளியால் செதுக்குகிறான்.
4. கொட்டாப்புளியால் அடிக்கிறான்.
5. கீழே ரம்பம் ஒன்று கிடக்கிறது.
6. ரம்பத்தால் மரத்தை அறுப்பான்.
7. இழைப்புளி ஒன்று இருக்கிறது.
8. இழைப்புளியால் இழைப்பான்.

தச்சன், உளி, செதுக்கு, கொட்டாப்புளி, ரம்பம், அறுப்பான், இழைப்புளி, இழைப்பான்.

பட்டம்

1. இந்தப் பையன் என்ன செய்கிறான்?
2. இவன் பட்டம் விடுகிறான்.
3. இவன் எப்படி விடுகிறான் ?
4. பட்டத்தை நூலிற் கட்டி விடுகிறான்.
5. பட்டத்துக்கு வால்கட்டி இருக்கிறான்.
6. பட்டம் பல வகைப்படும்.
7. காற்று அடித்தால் பட்டம் பறக்கும்.
8. பையன் ஓடினால் அது பறக்கும்.

பட்டம், எப்படி, வால், அடித்தால், ஓடினால், பறக்கும்.

பட்டம் விடுவது

(பாட்டு)

பட்டம் பறக்க விடு—காகிதப்

பட்டம் பறக்க விடு

பட்டம் பறப்பது பார்த்து மகிழலாம்

பட்டம் பறக்க விடு

கையிலே நூலைக் கருதிப் பிடித்து நீ

காற்றிற் பறக்க விடு

மண்ணினிலோடியே வானத்திற் பட்டம்

வகையாய்ப் பறக்க விடு.

நா. கனகராஜையர் B. O. L.

பறக்கவிடு, காகிதம், பார்த்து, மகிழலாம், கருதி, பிடித்து, மண்ணினில், ஓடி, வானத்தில், வகையாய்.



பசு

1. பசு ஒரு நல்ல பிராணி.
2. பசு நமக்குப் பால் கொடுக்கும்.
3. பால் மிகவும் சுவை உள்ளது.
4. பாலில் பிரை ஊற்றினால் தயிர் ஆகும்.
5. தயிர் கடைந்தால் மோர் ஆகும்.
6. மோரில் வெண்ணெய் எடுக்கலாம்.
7. வெண்ணெய் உருக்கினால் நெய் ஆகும்.

பசு, பிராணி, சுவை, பிரை, தயிர், வெண்ணெய், மோர், உருக்கினால்.



எறும்பு

1. எறும்பு ஒரு சிறிய பிராணி.
2. எறும்பிற் பலவகை உண்டு.
3. சிறிய எறும்பு சிற்றெறும்பு ஆகும்.
4. எறும்பு மிகவும் சுறுசுறுப்புஉள்ளது.
5. எறும்பு வளை தோண்டி உள்ளே இருக்கும்.
6. மழை நீர் வளைக்குள் நுழையாது.
7. எறும்பு சாரி சாரியாய்ப் போகும்.
8. கோடை காலத்தில் இரை தேடும்.
9. மழை காலத்தில் உள்ளே அடங்கும்.
10. நாம் எறும்புபோல உழைக்க வேண்டும்.

எறும்பு, சிறிய, வகை, சிற்றெறும்பு, சுறுசுறுப்பு, தோண்டி, உள்ளே, வாழும், நுழையாது, சாரி சாரி யாய், கோடை, இரை, காலம், உழைக்க, வேண்டும்.

நெல்லும் புல்லும்

(பாட்டு)

புல்:—நெல்லே நிமிர்ந்து வளர்வாய்—உன்னை
நீரால் வளர்க்கிறார் பாராய்

நெல்:—புல்லே செழித்து வளர்வாய்—உன்னைப்
போற்றினார் யாரோ நீ சொல்வாய்

புல்:—வயலில் வளர்வாயே நெல்லே—அங்கு
வரப்பிலே வளருவேன் நானே

நெல்:—வயலில் நீ ஏனோ நுழைந்தாய்—வந்து
வாய்க்காலில் நீரை அடைத்தாய்.

நா. கனகராஜையர், B. O. L.

நிமிர்ந்து, வளர்வாய், பாராய், செழித்து, போற்றினார், வரப்பிலே, நுழைந்தாய், அடைத்தாய்.

தகப்பனும் மகனும்

அப்பா! கடைக்குப் போவோம்.

குழந்தாய்! நீ நடப்பாயா?

கையைப் பிடித்து நடப்பேன்.

கடையில் உனக்கு என்ன வேண்டும்?

பம்பரம் வாங்க வேண்டும்.

பம்பரம் ஆடத் தெரியுமா?

கயிற்றைச் சுற்றி ஆடுவேன்.

மெல்ல, வா, போய் வருவோம்.

கடைக்கு, போவோம், குழந்தாய், நடப்பாயா, ஆடத்தெரியுமா, கயிற்றை, ஆடுவேன்.

ஊஞ்சல் (பாட்டு)

1. ஊஞ்சல் ஆடுவோம்—நாம்
ஊஞ்சல் ஆடுவோம்.
ஓடி ஆடிப் பாடிக் கூடி
ஊஞ்சல் ஆடுவோம்.

2. கால் ஆட்டுவோம்—நல்ல
காற்று வாங்குவோம்.
காலால் ஊஞ்சல் கயிற்றை யசைத்
களித்து மகிழுவோம். [துக்

நா. கனகராஜய்யர், B. O. L.

ஊஞ்சல், ஆடுவோம், ஓடி, ஆடி, பாடி, கூடி
காலால், ஆட்டுவோம், வாங்கிடுவோம், அசைத்து.

நல்ல மாணாக்கன்

1. இவன் ஒரு நல்ல பிள்ளை.
2. இவன் பெயர் சுந்தரம்.
3. எப்பொழுதும் உண்மையே பேசுவான்.
4. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய்ப்போவா [ன்.
5. பெரியோர் சொன்னபடி நடப்பான்
6. புத்தகங்களைக் கிழிக்க மாட்டான்.
7. சிரித்த முகமாய் இருப்பான்.
8. பாடத்தை நன்றாய்ப் படிப்பான்.

நல்ல, பிள்ளை, சுந்தரம், எப்பொழுதும், உண்மை, பேசுவான், பள்ளிக்கூடத்துக்கு, ஒழுங்காய், பெரியோர், சொன்னபடி, கிழிக்கமாட்டான், சிரித்த, நன்றாய்.

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

கடவுள்

(பாட்டு)

1. எல்லாம் வல்லவன் கடவுள்—அவன்
எங்கும் இருப்பவன் கண்டாய்
சொல்லால் அளப்பதருமை—அவன்
சொல்லுக் கடங்காத சோதி.

2. வானினை மண்ணைப் படைத்தான்—அவன்
மக்களை எல்லாம் படைத்தான்
தானே எவற்றுக்கும் தந்தை—அருள்
தந்தே உலகங்கள் தாங்கும்.

3. ஈயை எறும்பைப் படைத்தான்—இன்னும்
எண்ணில்லா உயிர்களை எல்லாம்
தாயினும் அன்பாய் வளர்ப்பான்—ஒரு
தந்தையும் தாயும் அவனே.

நா. கனகராஜைய்யர் B. O. L.

எல்லாம், வல்லவன், கடவுள், எங்கும் சொல், அளப்பது, அருமை, அடங்காத சோதி, வான், மண், மக்கள், படைத்தான், தந்தை, உலகம், வளர்ப்பான்.

The B. N. Press, Mount Road, Madras.